


16. 07. 2025

தலைப்பு செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.
- உள்நாட்டு ட்ரோன் கருவிகளின் முக்கியத்துவத்தை ஆபரேஷன் சிந்தூர் துல்லிய ராணுவத்தாக்குதல் பறைசாற்றுவதாக ராணுவத்தளபதி ஜென்ரல் அனில் சௌஹான் தெரிவித்துள்ளார்.
- மயிலாடுதுறை மாவட்டத்தில் 161 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டிதுடன் முடிவடைந்த பணிகளையும் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று துவக்கி வைத்தார்.
- MBBS BDS சேர்க்கைக்கான கலந்தாய்வு வரும் 30-ம் தேதி தமிழகத்தில் தொடங்கும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் கூறியுள்ளார்.
- ஜப்பான் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு ரான்கிரெட்டி, சிராக்ஷெட்டி இணை முன்னேறியுள்ளது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖

அமைச்சரவை கூட்டம்

பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் புதுதில்லியில் இன்றுகாலை நடைபெற்றது

சமூக பொருளாதாரம், ஊரக வளர்ச்சி, கிராமப்புற நலன் பொருளாதார மேம்பாடு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கி அவற்றை முன்னெடுத்துச்செல்வது குறித்து இதில் விரிவாக ஆராயப்பபட்டதாக தெரிகிறது.

அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் குறித்து மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் இன்று பிற்பகல் எடுத்துரைக்கிறார்.

இதனிடையே நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் வரும் திங்கட்கிழமை தொடங்குகிறது.

அடுத்தமாதம் 21-ம் தேதிவரை நடைபெறும் இக்கூட்டத்தொடரை சுமூகமாக நடத்துவது தொடர்பாக வரும் ஞாயிற்றுக்கிழமை அனைத்து கட்சி கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

❖❖❖❖❖

அனில் சௌஹான்

ஆபரேஷன் சிந்தூர் துல்லிய ராணுவ தாக்குதலின் போது பாகிஸ்தானின் ட்ரோன் மற்றும் வெடிமருந்துகளை இந்திய ராணுவத்தினர் செயலிழக்க செய்ததாக ராணுவத்தளபதி ஜென்ரல் அனில் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ட்ரோன் மற்றும் உள்நாட்டு தளவாடங்கள் தொடர்பான கருத்தரங்கில் இன்று உரையாற்றிய அவர், நம்நாட்டின் ராணுவத்திற்கோ அல்லது சிவில் கட்டமைப்பிற்கோ பாகிஸ்தான் ட்ரோன்கள் எந்தவித சேதத்தையும் ஏற்படுத்தவில்லை என்று குறிப்பிட்டார்.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆளில்லா விமானங்கள் மற்றும் வான் கருவிகளின் முக்கியத்துவத்தை ஆபரேஷன் சிந்தூர் பறைசாற்றுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேசத்தை பாதுகாப்பதற்கான கட்டுமானங்களுக்கு முதலீடுகள் அதிகரிக்கப்பட வேண்டுமென்று கூறியஅவர், வெளிநாட்டு தொழில்நுட்பத்தை நாம் சார்ந்திருக்கும் போது நமது உள்நாட்டு தயாரிப்பு நடவடிக்கைகள் குறைவதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖

கல்வி வாரியம்

மாணாக்கரிடையே ஆரோக்கியமான வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லும் வகையில் உரிய விழிப்புணர்வை ஏற்படுத்த எண்ணெய் வாரியங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று மத்திய இடைநிலை கல்வி வாரியம் பள்ளிகளை அறிவுறுத்தியுள்ளது.

ஆரோக்கியமான உணவுகளை உண்பது, உடற்பயிற்சிகளை முறையாக செய்வது போன்றவற்றில் மாணவ மாணவிகள் ஈடுபட பள்ளிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் இவ்வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது.

பள்ளிகளில் மாடிப்படிகளை பயன்படுத்துவது, இடைவேளை நேரங்களில் சிறிய உடற்பயிற்சிகளை மேற்கொள்வது, நடந்துசெல்வது போன்றவற்றை மாணாக்கரிடையே ஊக்குவிக்கவும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

உடல்பருமன் மற்றும் அதிக எடை கொண்ட வளர் இளம் பருவத்தினரின் எண்ணிக்கை 2025-ம் ஆண்டு வாக்கில் 45 கோடியாக அதிகரிக்கும் என்று அஞ்சப்படும் நிலையில், ஆரோக்கியமான வாழ்வை முன்னெடுத்துச் செல்ல இவ்வாரியம் வலியுறுத்தியுள்ளது.

❖❖❖❖❖

உலகநிதி

வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் உலகத்தில் பணபரிவர்த்தனைகள் தவறாக பயன்படுத்துவதற்கான அச்சுறுத்தல்கள் உருவாகி உள்ளதாக உலக நிதி கண்காணிப்பு பிரிவான நிதி செயலாக்க சிறப்புபடை எடுத்துரைத்துள்ளது.

டிஜிட்டல் மூலமாக தவறாக கைப்பற்றப்படும் பணம் தீவிரவாதத்திற்கு ஆதரவாகவும், உலகஅமைதிக்கு ஊறுவிளைவிப்பது போன்ற குற்றங்களுக்கும் துணை போவதாக இந்த நிதியமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

எனவே உலகளாவிய நிதி கட்டமைப்பை பாதுகாக்க சர்வதேச நாடுகளுடன் பணியாற்றி வருவதாகவும் இந்த நிதி செயலாக்க சிறப்பு பிரிவு கூறியுள்ளது.

இதுசார்ந்த 2 முக்கிய அறிக்கைகளை இந்த அமைப்பு சென்றமாதமும், இம்மாதமும் வெளியிட்டிருப்பதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖

தேசிய செயற்கை நுண்ணறிவு தினம்

தேசிய செயற்கை நுண்ணறிவு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

விவசாயம், சுகாதார பராமரிப்பு, போக்குவரத்து கட்டுப்பாடு, பொதுசேவைகள் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் தடம் பதித்துள்ள AI தொழில்நுட்பத்தின் திறன்மேம்பாடு மற்றும் இளைஞர்களுக்கான இத்துறைசார் வேலைவாய்ப்புகள் குறித்து இந்நாளில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழகத்தில் தகுதியுள்ள அனைவருக்கும் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் 48 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளை இன்று துவக்கி வைத்து பேசியஅவர், இம்மாவட்டத்திற்கான 8 புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

தரங்கம்பாடி இருவழிச்சாலையாக மேம்படுத்தப்படும் என்றார்.

குத்தாலம் வாய்க்கால் சீரமைக்கப்படும்,

சீர்காழியில் புதிய நகராட்சி அலுவலகம் கட்டப்படும்

நீடூர் ஊராட்சியில் புதிய ரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

113 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய முதலமைச்சர் 54 ஆயிரம் பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

❖❖❖❖❖

கீதாஜீவன்

தமிழ்நாட்டில் 13 துறைகளின் கீழ், 43 சேவைகளுக்கான முகாம்கள் நடைபெறும் நிலையில் இந்த திட்டம் மக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளதாக மாநில சமூகநலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாமை இன்று துவக்கிவைத்து பேசியஅவர், மாவட்டத்தில் நேற்று மட்டும் மகளிர் உரிமைத் தொகைக்காக 2 ஆயிரத்து 108 மனுக்கள் பெறப்பட்டதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

இந்த முகாம்களில் பெறப்படும் மனுக்கள் கணினியில் பதிவுசெய்யப்பட்டு முதலமைச்சரால் கண்காணிக்கப் படுவதாக அவர் எடுத்துரைத்தார்.

ஆதார், குடும்ப அட்டை திருத்தங்கள், குடிசை மாற்றுவாரியம் மூலமான தொழில், அம்பேத்கர் தொழில்முனைவோர் திட்ட கடனுதவிகளுக்கும் மனுக்கள் பெறப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

❖❖❖❖❖

மா.சுப்ரமணியன்

தமிழ்நாட்டில் MBBS BDS மருத்துவ படிப்புகளில் மாணாக்கர் சேர்க்கைக்கான கலந்தாய்வு வரும் 30-ம் தேதி தொடங்கும் என்று மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், விடுபட்ட மாணாக்கர் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய மேலும் 2 நாட்கள் காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

கலந்தாய்விற்கு இதுவரை 72 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது என்றார்.

❖❖❖❖❖

கே.என்.நேரு

திருச்சி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திலிருந்து பேருந்து சேவைகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.K.N.நேரு இன்று கொடியசைத்து துவக்கிவைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், பயணிகளுக்கு குடிநீர் உள்ளிட்ட அடிப்படை தேவைகளை பூர்த்திசெய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖

காலஅவகாசம் நீட்டிப்பு

தமிழகத்தில் அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் முதுநிலை பாடப்பிரிவுகளில் மாணாக்கர் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்ப பதிவு வரும் 31-ம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இதற்கு விண்ணப்பிக்க நேற்று கடைசிநாளாக இருந்தது.

❖❖❖❖❖

தென்காசி வாய்ஸ்

தென்காசி மாவட்டத்தில் கருப்பாநதி குண்டாறு அணைகள் அதன் முழு கொள்ளவை எட்டியுள்ளன.

கார் சாகுபடிக்கான முன்னேற்பாட்டு பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖

தண்ணீர் திறப்பு

கிருஷ்ணகிரி நீர்தேக்கத்திலிருந்து வலது இடதுபுற கால்வாய்களின் முதல்போக பாசனத்திற்கான தண்ணீரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ்குமார் இன்று திறந்துவைத்தார்.

இன்று முதல் வரும் நவம்பர் 12-ம் தேதிவரை 120 நாட்களுக்கு திறக்கப்படும் தண்ணீரின் மூலம் பெரியமுத்தூர், சுண்டேகுப்பம், கால்வேஹள்ளி, குண்டலப்பட்டி, காவேரிப்பட்டிணம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 9 ஆயிரத்து 12 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

❖❖❖❖❖

இருவரி

தமிழகத்தில் உழவர் நலத்துறை சார்பில் நம்மாழ்வார் விருது வழங்கப்படவுள்ளது.

இவ்விருதுபெற தகுதியுடையோர் வரும் செப்டம்பர் 15-ம் தேதிக்குகள் வட்டார வேளாண் உதவி இயக்குநரை அணுகி விண்ணப்பிக்கலாம்.

உயிர்ம வேளாண்மையில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கு இவ்விருது வழங்கப்படவுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆடி அமாவாசையை முன்னிட்டு வரும் 24-ம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு பதில் அடுத்தமாதம் 9-ம் தேதி வேலைநாளாக இருக்கும் என ஆட்சித்தலைவர் திருமதி. அழகுமீனா தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் நாளைமறுநாள் நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வி. சரவணன் தெரிவித்துள்ளார்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு அரசு கல்லூரி மாணாக்கர் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திருமதி. சிவசவுந்தரவள்ளி இன்று கொடியசைத்து துவக்கிவைத்தார்.

❖❖❖❖❖

பேட்மிட்டன்

ஜப்பான் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் ரான்கிரெட்டி, சிராக்ஷெட்டி இணை முன்னேறியுள்ளது.

ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் லக்ஷயா சென் முன்னேறியுள்ளார்.

❖❖❖❖❖

கிரிக்கெட்

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி சௌத்ஆம்டனில் இன்று தொடங்குகிறது.

இரு அணிகளுக்கிடையேயான 2-வது போட்டி வரும் 19-ம் தேதியும்,

3-வது இறுதிபோட்டி 22-ம் தேதியும் நடைபெறும்.

❖❖❖❖❖

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 17 ஆயிரத்து 235 கனஅடியாக குறைந்துள்ளது.
அணையிலிருந்து 18 ஆயிரத்து 500 கனஅடி வீதம் நீர் வெளியேற்றப்படுகிறது.
அணையின் நீர்மட்டம் 119.56 அடியாக உள்ளது
ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 16 ஆயிரம் கனஅடியாக உள்ளது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது